
**1. 'இந்தியா சைக்கிள்ஸ்4சேஞ்ச் சவாலுடன்' தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**



இ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) வேளாண் அமைச்சகம்

✓ நாடு முழுவதும் மிதிவண்டி சார்ந்த முன்னெடுப்புகளை உருவாக்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், கடந்த 2020 ஆம் ஆண்டில், 'இந்தியா சைக்கிள்ஸ்4சேஞ்ச்' என்ற சவாலை அறிமுகம் செய்தது. சமீபத்தில், நாட்டின் 11 நகரங்களுக்கு 'India's Top 11 Cycling Pioneers' என்ற பட்டத்தை அவ்வமைச்சகம் வழங்கியது. அத்துடன் முதல் பருவத்தின் அடுத்த கட்டமும் தொடங்கியுள்ளது. இந்த 11 நகரங்களும் தங்களின் முயற்சிகளுக்காக தலா ₹1 கோடி பரிசினைப் பெறும்.

---

**2. CSR நிதியைப் பயன்படுத்தி தனியார் மருத்துவமனைகள்மூலம் இலவச COVID-19 தடுப்பூசி இயக்கத்தை தொடங்கியுள்ள முதல் மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ தனியார் மருத்துவமனைகளில் இலவச COVID தடுப்பூசி இயக்கத்தை அறிமுகப்படுத்திய நாட்டின் முதல் மாநிலமாக தமிழ்நாடு அரசு உள்ளது. இந்தத் திட்டத்திற்கு பல்வேறு நிறுவனங்களின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியங்கள் நிதியளிக்கின்றன.

✓ இத்திட்டத்தின்கீழ், 130 தனியார் மருத்துவமனைகள் பொதுமக்களுக்கு இலவச COVID தடுப்பூசிகளை வழங்கவுள்ளன. உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகளில் 75 சதவிகிதத்தை மத்திய அரசு கொள்முதல் செய்கிறது; மீதமுள்ள 25% தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகிறது. அதில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாமலேயே உள்ளன.

---

**3. COVID-19 நோயாளிகளுக்கான இந்தியாவின் முதல் உள்நாட்டு உடலியல் அளவுருக்கள் கண்காணிப்பு அமைப்பின் பெயர் என்ன?**

**அ) COVID BEEP ☑**




ஆ) COVID SYS

இ) C19- MONITOR

ஈ) C19- CHECK

✓ "COVID BEEP" என்பது இந்தியாவின் முதல் உள்நாட்டு, கம்பியில்லா உடலியல் அளவுருக்கள் கண்காணிப்பு அமைப்பாகும். இதனை COVID-19 நோயாளிகளுக்காக, எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிட் & அணுசக்தித் துறை ஆகியவற்றுடன் இணைந்து ஐதராபாத்தின் ESIC மருத்துவக்கல்லூரி உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பை பெரிய அளவில் பயன்படுத்துவதற்காக, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்திடம் திட்டமொன்று சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

---

**4. மருத்துவக்கல்லூரி சேர்க்கைகுறித்து, "அகில இந்திய ஒதுக்கீடு" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?**

அ) 1975



ஆ) 1980

**இ) 1986 ☑**

ஈ) 1990

✓ 1986ஆம் ஆண்டில், உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்கீழ், "அகில இந்திய ஒதுக்கீடு" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வேறொரு மாநிலத்தில் அமைந்துள்ள மருத்துவக்கல்லூரியில் படிக்க விழையும் பிற மாநிலத்தைச்சேர்ந்த மாணவர்களுக்கு, இருப்பிடத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் தகுதி அடிப்படையில் வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன் இது அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ இத்திட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 15% UG இடங்களும் 50% PG இடங்களும் உள்ளன. சமீபத்தில் மத்திய சுகாதார அமைச்சகம் ஆனது இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவச் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) 27% இடஒதுக்கீடும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடும் அகில இந்திய ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. 2021-22 முதல் மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் இந்த இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படும்.

---

**5. இந்தியாவின் எத்தனை புலிகள் காப்பகங்கள், உலகளாவிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட புலிகள் தரநிலைகளின் (CA | TS) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன?**

அ) 5

ஆ) 3

இ) 11

**ஈ) 14 ☑**

✓ உலக புலிகள் நாளையொட்டி, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சரான பூபேந்திர யாதவ் இந்தியாவின் 14 புலிகள் காப்பகங்கள் உலகளாவிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட புலிகள் தரநிலைகளின் (CA | TS) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாகக் கூறினார்.

✓ அஸ்ஸாமில் உள்ள மானஸ், காசிரங்கா மற்றும் ஓராங்; மத்திய பிரதேசத்தின் சாத்புரா, கன்ஹா மற்றும் பன்னா; மகாராஷ்டிராவின் பெஞ்ச்; பீகாரின் வால்மீகி புலிகள் காப்பகம்; உத்தரபிரதேசத்தின் துத்வா; மேற்கு வங்கத்தின் சுந்தரவனக்காடுகள்; கேரளத்தின் பரம்பிக்குளம்; கர்நாடகத்தின் பந்திப்பூர் மற்றும் தமிழ்நாட்டின் முதுமலை மற்றும் ஆனைமலை ஆகியன அந்த 14 அங்கீகரிக்கப்பட்ட புலிகள் காப்பகங்கள் ஆகும்.

✓ CA|TS என்பது புலிகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பை நிர்வகிக்க, சிறந்த நடைமுறை மற்றும் தரங்களை நிறுவும் அளவுருக்களின் தொகுப்பாகும். இது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு கருவியாகும். CA|TS 2013'இல் தொடங்கப்பட்டது. இது புலிகள் & காப்புப்பகுதி நிபுணர்களால் உருவாக்கப்பட்டதாகும். இது 2022'க்குள் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கான உலகளாவிய குறிக்கோளான T*2'இன் ஒரு முக்கியப்பகுதியாகும். புலிகளுக்கான பாதுகாப்பான இடத்தை உறுதி செய்வதே CA|TS'இன் நீண்டகால இலக்காகும்.

---

**6. நடப்பாண்டுக்கான (2021) மகாராஷ்டிர பூஷன் விருதினை வென்றவர் யார்?**

அ) சச்சின் டெண்டுல்கர்



ஆ) லதா மங்கேஷ்கர்

**இ) ஆஷா போஸ்லே ☑**

ஈ) ரத்தன் டாடா

✓ முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தலைமையிலான, மகாராஷ்டிர பூஷன் தேர்வுக்குழு, ஆஷா போஸ்லேவை மதிப்புமிக்க மகாராஷ்டிரா பூஷன் விருது – 2021'க்கு தேர்வுசெய்துள்ளது. மகாராஷ்டிராவின் கலாச்சார விவகார அமைச்சர் அமித் தேஷ்முக் இதனை அறிவித்தார். மகாராஷ்டிர பூஷன் என்பது மகாராஷ்டிராவின் மிகவுயர்ந்த குடிமக்கள் விருதாகும்.

✓ இலக்கியம், கலை, விளையாட்டு, அறிவியல், சமூகப்பணி, பத்திரிகை & பொது நிர்வாகம் ஆகிய துறைகளில் சிறப்பான சாதனை புரிவோருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் மகாராஷ்டிர மாநில அரசால் வழங்கப்படுகின்ற இவ்விருது, முதன்முதலில் கடந்த 1996'இல் வழங்கப்பட்டது. இந்த விருதை வென்ற முதல் நபர், புருஷோத்தம் இலட்சுமண் தேஷ்பாண்டே ஆவார். மகாராஷ்டிர பூஷன் விருது வென்றோருக்கு ₹10 இலட்சம் ரொக்கப் பரிசும், நினைவுப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

---

**7. "அனைவருக்கும் AI" என்ற முன்னெடுப்புக்காக CBSE மற்றும் கல்வி அமைச்சகத்துடன் ஒத்துழைத்துள்ள நிறுவனம் எது?**

அ) மைக்ரோசாப்ட்

**ஆ) இன்டெல் ☑**

இ) விப்ரோ

ஈ) டெல்

✓ இன்டெல், CBSE மற்றும் கல்வியமைச்சகம் ஆகியவை 2021 ஜூலை.29 அன்று "அனைவருக்கும் AI" என்ற முன்னெடுப்பைத் தொடங்குவதாக அறிவித்தன. இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கம், இந்தியாவில்

உள்ள அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு (AI) பற்றிய அடிப்படை புரிதலை உருவாக்குவதாகும். அனைவருக்கும் AI என்பது 4 மணி நேர, சுயகற்றல் திட்டமாகும்.

---

**8. 'சதுப்புநில சுற்றுச்சூழலமைப்பைப் பாதுகாப்பதற்கான சர்வதேச நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஜூலை.23

**ஆ) ஜூலை.26 ☑**

இ) ஜூலை.28

ஈ) ஜூலை.30



- ✓ 'சதுப்புநில சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான சர்வதேச நாளானது, 2015ஆம் ஆண்டில், UNESCO'இன் பொது மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. UNESCO ஆனது ஆண்டுதோறும் ஜூலை.26ஆம் தேதியன்று சதுப்புநில சுற்றுச்சூழல் பாதுகாப்பு நாளைக் கொண்டாடுகிறது.
- ✓ இது சதுப்புநில அமைப்புகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அவற்றின் நிலைத்த மேலாண்மை மற்றும் பாதுகாப்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. UNESCO'இன் கூற்றுப்படி, உலகளாவிய வனப்பகுதியின் ஒட்டுமொத்த இழப்புகளைவிட 3-5 மடங்கு வேகத்தில் சதுப்புநிலங்களை நாம் இழந்து வருகிறோம். உட்கட்டமைப்பு மேம்பாடு, நகரமயமாக்கல் மற்றும் உழவு நிலமாக மாற்றுதல் ஆகியன இதற்கு முக்கிய காரணங்களாக கூறப்படுகின்றது.

---

**9. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது பின்வரும் எந்த மாநிலத்தில் வடகிழக்கின் முதல் சிறப்பு மையத்தை அமைக்க உள்ளது?**

அ) அஸ்ஸாம்

ஆ) சிக்கிம்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) மேகாலயா



- ✓ அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகமானது அருணாசல பிரதேசத்தின் பாபம் பரே மாவட்டத்தில் உள்ள கிமினில், வடகிழக்கின் முதல் சிறப்பு மையத்தை நிறுவவுகிறது. உயிரியல் வளங்கள் மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கான சிறப்பு மையமான இதனை உயிரித்தொழினுட்பத்துறை அங்கீகரித்துள்ளது. இதன் புதிய கட்டடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு கட்டுமானம் ஆகியவை ₹50 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

---

**10. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் உருவாக்கப்பட்ட மின்னணுக்கழிவுகளின் சதவிகிதம், 2020ஆம் ஆண்டில், எவ்வளவுக்கு உயர்ந்துள்ளது?**

அ) 12.6%

ஆ) 24.6%

**இ) 31.6% ☑**

ஈ) 42.6%

**31.6%**

- ✓ கடந்த 2020ஆம் ஆண்டில், இந்தியா, 10,14,961.2 டன் மின்-கழிவுகளை உருவாக்கியுள்ளது என மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற இணையமைச்சர் அஷ்வினி குமார் சௌபே கூறினார். இது, அதற்கு முந்தைய ஆண்டில் (2019) உருவான மின்னணுக்கழிவுகளின் அளவைவிட 31.6% அதிகமாகும்.
- ✓ மேலும், மின்னணுக்கழிவுகள் தொடர்பான தேசிய அளவிலான தரவுகள் 2017-18ஆம் ஆண்டிலிருந்துதான் கிடைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஒலிம்பிக் ஹாக்கியில் இந்தியாவுக்கு வெண்கலம்: 41 ஆண்டுகளுக்குப் பிறகு பதக்கம் கைகூடியது**

ஜப்பானில் நடைபெறும் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு ஒரே நாளில் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என இரு பதக்கங்கள் கிடைத்தது. அதில், ஹாக்கி போட்டியில் 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இந்தியா 5-4 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி வெண்கலப்பதக்கம் வென்றது. மல்யுத்தத்தில் இரவி தாஹியா 57 கிலோ பிரிவில் வெள்ளி பெற்றார். இத்துடன் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 5 ஆகியுள்ளது.

ஹாக்கி வெண்கலம், ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் 41 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஆடவர் அணிக்கு கிடைத்துள்ள பதக்கமாகும். கடைசியாக இந்தியா 1980 மாஸ்கோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றிருந்தது. தற்போது வென்றுள்ள வெண்கலத்தையும் சேர்த்து, ஒலிம்பிக் ஹாக்கியில் இந்திய ஆடவர் அணி 8 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 12 பதக்கங்களை வென்றுள்ளது.

---

**2. சேதி தெரியுமா?**

**ஜூலை.24:** டோக்கியோ ஒலிம்பிக் 49 கிலோ பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் சாய்கோம் மீராபாய் சானு இந்தியாவுக்கு முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். 2000 சிட்னி ஒலிம்பிக்கில் பளு தூக்கும் பிரிவில் கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலப் பதக்கம் வென்ற பிறகு இந்தியா வென்றுள்ள பதக்கம் இது.

**ஜூலை.24:** திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கும் முத்துக்கலிங்கன் கிருஷ்ணனை நியமித்து மத்தியக் கல்வி அமைச்சகம் உத்தரவிட்டது.

**ஜூலை.25:** ரஷ்யாவில் நடைபெற்ற 'சர்வதேச கணித ஒலிம்பியாட் 2021' போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 5 பதக்கங்களை இந்திய மாணவர்கள் வென்றனர். இது உலகின் பழமையான அறிவியல் போட்டி.

**ஜூலை.26:** ஹங்கேரியில் நடைபெற்ற உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை பிரியா மாலிக் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

**ஜூலை.26, 29:** தெலங்கானாவில் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமப்பா கோயில், குஜராத்தில் கட்ச் பகுதியில் உள்ள தொன்மையான ஹரப்பா நகரான தோலவிரா ஆகியவற்றை உலக பாரம்பரிய சின்னங்களாக யுனெஸ்கோ அறிவித்தது.

**ஜூலை.27:** தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியோரை கௌரவிக்க 'தகைசால் தமிழர்' என்கிற புதிய விருதை தமிழ்நாடு அரசு உருவாக்கியது. இதன் முதல் விருதுக்குச் விடுதலைப் போராட்ட வீரரும் நூற்றாண்டு கண்ட இடதுசாரி தலைவருமான என் சங்கரய்யா தேர்வுசெய்யப்பட்டார்.

**ஜூலை.27:** கல்விச்சேர்க்கையில் வன்னியர்களுக்கு 10.5 சதவீதம், சீர்மரபினருக்கு 7 சதவீதம், இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 2.5 சதவீதம் சிறப்பு உள்-ஒதுக்கீடு வழங்குவதற்கான அரசாணையைத் தமிழக அரசு வெளியிட்டது.

**ஜூலை.29:** கேரளத்தில் ஆண் அரசு ஊழியர்கள் திருமணத்தின்போது உயரதிகாரிகளிடம் வரதட்சணை மறுப்புச்சான்றிதழ் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

**ஜூலை.30:** புதுக்கோட்டையில் சங்ககால பழமைவாய்ந்த பொற்பனைக் கோட்டையில் அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

**ஆகஸ்ட்.1:** டோக்கியோ ஒலிம்பிக்கில் பாட்மிண்டன் மகளிர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். 2016'இல் வெள்ளிப்பதக்கம் வென்ற சிந்து, இப்போது வெண்கலம் வென்றதன் மூலம், ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் தொடர்ச்சியாக இருபதக்கங்களை வென்ற முதல் இந்திய வீராங்கனையாகியிருக்கிறார்.

---